**ஜா-எல நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜா-எல நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் ஜா-எல நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகக்ளில் உளளடங்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுக்கு தொடர்புடனான இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமம் இலக்கம் 3.5 பிரகாரம் LGD/10A/4/ந.கி/2019 கொண்ட உள்ளூராட்சி அணையாளரின் 2021 பெப்ரவரி 12 திகதி கடிதம் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் 14 வகைகளின் கீழ் வகைப்படுத்த வேண்டிய போதும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அலுவலக உபகரணங்கள், கணனி மென்பொருள் மற்றும் பாதைகள், மதகுகள் மற்றும் பாலங்கள் போன்ற சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய கொரோனா நிலைமை காரணமாக மீள்மதிப்பீட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்ய முடியவில்லை என அறிவிக்கிறேன். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நியமம் இலக்கம் 18.7 LGD/10A/4/ந.கி/2019 கொண்ட உள்ளூராட்சி அணையாளரின் 2021 பெப்ரவரி 01 திகதி கடிதம் பிரகாரம் அனைத்து சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டிய போதும் சபையின் இயந்திர உபகரணங்கள், மோடார் வண்டி மற்றும் கருத்தை வண்டி மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் சபைக்கு சொந்தமான 252 காணித் துண்டுகளில் 17 காணித் துண்டுகள் மாத்திரம் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | 2022 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய மற்றும் அதன் பிரகாரம் பெறுமானத் தேய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) நியம இலக்கம் 9.9 பிரகாரம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான நியமங்களுக்கான விரிவான விளக்கங்களில் உள்ளடங்கிய EG 2.7 பந்தி பிரகாரம் கிடைத்த மொத்த மீண்டெழும் செலவு மானியங்களிலிருந்து ஆண்டினுள் விரிவான வருமானத்திற்கு இனங்கண்ட அளவை குறைத்து எஞ்சியதை மிகையின் இனங்காணாத மானியமாக குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் காட்ட வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கு உரியதாக கிடைக்க வேண்டிய ரூபா 10,829,000 ஆன மூலதன மானிய மொத்த பெறுமதி, குறிப்பு இலக்கம் 05 இக் கீழ் விரிவான வருமானக் கூற்றில் காட்டியிருந்துடன் கடந்த ஆண்டில் ரூபா 16,438,272 தொகையான மூலதன செலவுகளை மானியத்திலிருந்து மூலதனமாக்கப்பட்ட பெறுமதிக்குரிய பெறுமானத் தேய்விட வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | எதர்காலத்தில் ஜர்னல் குறிப்பு இட்டு சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | |
| (ஈ) உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான நியமங்களுக்கான விரிவான விளக்கங்களில் உள்ளடங்கிய EG 3.2 பந்தி பிரகாரம் பாதைகள் மதகுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதி உருப்படிகள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் வேறு கணக்கீட்டு குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்ய வேண்டிய போதும் 2020 ஆண்டில் ரூபா 29,567,827 மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 14,741,154 செலவிட்டு அபிவிருத்தி செய்த பாதைகள், மதகுகள், கால்வாய் மற்றும் பக்க மதில்கள் அவ்வாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதர்காலத்தில் ஜர்னல் குறிப்பு இட்டு சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நியமங்களுக்கான விரிவான விளக்கங்களில் உள்ளடங்கிய EG 3.1 பந்தி பிரகாரம் நடைமுறை ஏதேனும் மூலதன வேலைகள் இருப்பின் அவற்றை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண அட்டவணையில் வேறான வகையொன்றாக காட்ட வேண்டிய போதும் மீளாய்வாண்டு இறுதியில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 6,225,000 ஆன 02 நடைமுறை வேலைகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை வேலைகள் மற்றும் வேலை அட்டவணை அப் பிரிவனால் சமர்பிக்கப்படவில்லை என அறிக்கையிடுகிறேன். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | நியம இலக்கம் 9 மற்றும் 10 பிரகாரம் பரிமாற்ற கொடுக்கல் வாங்கலினால் ஏற்படும் வருமானம் மற்றும் பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கலினால் ஏற்படும் வருமானங்களை வெவ்வேறாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டிய போதும் சபையின் ரூபா 173,766,641 ஆன அனைத்து வருமானங்களையும் அவ்வாறு வெவ்வேறாக இனங்காணாது பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கலினால் கிடைத்த வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிக்கையிடுகிறேன். | |
| (எ) | இலக்கம் LGD/10A/4/ந.கி/2019 கொண்ட உள்ளூராட்சி அணையாளரின் 2020 செப்டம்பர் 18 திகதி கடிதம் பிரகாரம் சொத்துக்களிற்காக குறியீட்டு இலக்கம் 2112 கீழ் மூலதன செலவுகளை காட்ட வேண்டிய போதும் மூலதன செலவுக் கணக்கின் மீதியான ரூபா 28,438,602 தொகை விரிவான வருமான கூற்றில் நிதிக் கிரயத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | எதர்காலத்தில் ஜர்னல் குறிப்பு இட்டு சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | |
| (ஏ) | நியமங்களுக்கான விரிவான விளக்கங்களில் உள்ளடங்கிய EG 3.3 பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத் தேய்விட வேண்டிய போதும் மீளாய்வாண்டில் சபையின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத் தேய்விடப்பட்டிருக்கவில்லை. | 2022 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இவ் வகைகளை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய மற்றும் அதன் பிரகாரம் பெறுமானத் தேய்விட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | எடுத்துக் காட்டான படிவங்களில் குறிப்பிலக்கம் 4 இன் கீழ் மீண்டெழும் செலவிற்காக அரசின் பங்களிப்பு குறிப்பிடப்பட வேண்டிய போதும் ரூபா 72,845,000 ஆன அரச பங்களிப்புத் தொகை குறிப்பு இலக்கம் 4 இன் கீழ் குறிப்பிடாது குறிப்பு இலக்கம் 6 இக் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. | எதர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வுஅவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உன்மையாக சபைக்கு கிடைக்காத உடன்படிக்கை கைச்சாத்திடாத 03 கடையறைகளிற்காக கிடைக்க வேண்டிய முற்பண தொகையாக ரூபா 2,066,119 தொகையொன்று கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருமான விடயம் ஊடாக உறுதியொன்று வழங்கியதனால் அதன் பிரகாரம் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கிறேன். | சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு முத்திரைக் கட்டண வருமானத்தை கணக்கீடு செய்யும் போது சபையின் முத்திரைக் கட்டணத்திலிருந்து வாகன கடன்களுக்காக உளளூராட்ச்சி திணைக்களத்தினால் குறைத்திருந்த கடன் தவணை பெறுமதி ரூபா 1,086,000 இனை முத்திரைக் கட்டண வருமானத்திற்கு செலவு வைக்காததனால் மீளாய்வாண்டு முத்திரைக் கட்டண வருமானம் அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிக்கையிடுகிறேன். | |
| (இ) | பணம் கிடைத்து, கொடுப்பனவு பூர்த்தி செய்த 03 வேலைகள் மற்றும் உடன்படிக்கை கைச்சாதிடப்படாத 02 வேலைகளுக்காக கிடைக்க வேண்டிய மூலதன அன்பளிப்பாக ரூபா 2,220,933 கணக்கீடு செய்யப்பட்டதனால் மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய மூலதன அன்பளிப்பு அப் பெறுமானத்தால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | கொடுப்பனவு பூர்த்தி செய்த 03 வேலைகள் கடன்கொடுனராக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் கணக்காய்விற்கு காலப்பகுதியளவில் அவ்வாண்டுகளில் இறுதி கொடுப்பனவு செய்திருந்ததாக அறிவிக்கிறேன். | |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் கடன்கொடுனர் ரூபா 10,344,939 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | செலுத்தி முடிந்த கடன்கொடுனர்களை, கடன்கொடுனர் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | செயற்பாடு, முதலீடு மற்றும் நிதி செயற்பாடுகளினால் உருவாகும் காசுப் பாய்ச்சல் மாத்திரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட வேண்டிய போதும் நடைமுறையல்லாத சொத்துக்கள் மீள் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 3,688,787,625 முதலீட்டு செயற்பாடுகளினால் உருவாகும் காசுப் பாயச்சலாகவும் மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய நடைமுறையல்லாத பொறுப்பு மீதி ரூபா | காணி மற்றும் கட்டிடங்களிற்காக இந்த பெறுமதி 2021 திசெம்பர் 31 திகதிக்கு கணக்கீடு செய்திருக்காததனால் இந்த மீள் மதிப்பீட்டு பெறுமதியை காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்படுவதாக அறிவிக்கிறேன். | |

9,016,400 நிதி செயற்பாடுகளினால் உருவாகும் காசுப் பாய்ச்சலாக போலியாக காசுப்பாய்சலின் காட்டப்பட்டிருந்தது.

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள 10 கணக்கு விடயங்களில் 2021 திசெம்பர் 31 திகதிக்கு கணக்கு மீதி மற்றும் துணை பதிவேடுகள் பிரகாரம் மீதிகளிக்கிடையில் ரூபா 29.815.327 ஆன வித்தியாசமாது. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். | குறித்த மீதிகளில் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 அதிகாதரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கொவிட் தொற்று காரணமாக சபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 04 சொத்துக்களில் 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்காக அறவிட வேண்டிய வரித் தொகை ரூபா 975,220 இனை சபை தீர்மானத்தின் மீது பதிவழிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக உள்ளுராட்ச்சி அணையாளருக்கு அனுப்பி இருந்த போதும் கணக்காய்வு திகதியான 2021 திசெம்பர் 31 அளவிளும் அதற்காக அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | அங்கீகாரத்திற்காக உள்ளுராட்ச்சி அணையாளருக்கு அனுப்பியுள்ளதுடன் 2021 ஒக்தோபர் 07 மற்றும் 2022 மே 25 திகதியுயை நினைவூட்டல் கடிதம் அனுப்பியுள்ளதாக அறிவிக்கிறேன். | உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | (i) இலக்கம் 104(1) | இரும்பு வலையொன்று மற்றும் ரூபா 140,000 பெறுதியான இரும்பு கிறேடர் களவொன்று | பொலிசின் மூலம் மேற்கொண்ட விசாரணைகளின் மூலமும் களவிற்குரிய | தொடர்புடைய பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பாக பொலிசில் முறைபாடொன்று செய்துள்ளதை தவிர எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | சந்தேக நபர்களை இதுவரை இனங்காண இயலுமை கிடைக்கவில்லை என அறிவிக்கிறேன். | எடுக்க வேண்டும். |
| (ii) | இலக்கம் 371(இ) | 2021 ஆண்டிற்கு முன் 02 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 137,749 ஆன உப கட்டுநிதிகளை 2021 திசெம்பர் 31 அன்றும் தீர்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | தொடர்புடைய பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 44,943,673 ஆக இருந்ததுடன், இதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டில் மிகை ரூபா 1,949,338 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டிய நிலுவை வீதவரி பெறுமதியின் ரூபா 50,000 தொகையை விஞ்சியிருந்த 108 வீதவரி அலகுகளிற்காக அறவிட வேண்டிய நிலுவை வீதவரி பெறுமதி ரூபா 12,535,903 ஆக இருந்ததுடன் அவற்றில் 2022 ஏப்ரல் 19 திகதியன்று 15 அலகுகளிலிருந்து ரூபா 2,185,939 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | எஞ்சிய தொகையை அறவிடுவதற்காக ஆதனத் தடை செய்ய உரிய சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். | நிலுவை வருமானம் அறவிட நடவக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 நவம்பர் 01 திகதிய இலக்கம் LGD/13/2016 கொண்ட சுற்றறிக்கை பிரகாரம் உடன்பட்ட திகதியிலிருந்து ஒவ்வொறு மூவ்வாண்டிற்கும் ஒரு முறை மாதாந்த வாடகையை, மதிப்பீட்டின் மீது மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டிய போதும் 2021 திசெம்பர் 31 திகதியளவில் ஜாஎல பொதுச் சந்தை 105 வியாபார நிலையங்களிலிருந்து 2011 மதிப்பீட்டின் மீது கடையறை வாடகை அறவிடப்பட்டிருந்தது. 2018 மே 25 திகதி கிடைத்திருந்த புதிய | 2021 நவம்பர் 29 திகதி திருத்திய புதிய மதிப்பீடொன்று கிடைத்துள்ளதால் அதன் பிரகாரம் கடையறைகளின் உடன்படிக்கைகளை புதுப்பிக்க கடையறை குத்தகைதாரர்களுக்கு புதிய மதிப்பீட்டுடன் எழுத்து மூலம் அறிவித்து கடையறை வாடகை அறவிடல் தொடர்பாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன். | கிடைத்துள்ள மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிட வேண்டியதுடன் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டை 2020 செப்டம்பர் 10 திகதி முதல் அமுல்படுத்த சபை தீர்மானித்திருந்த போதும் அதனை நடைமுறைப்படுத்தி இருக்காததுடன் 2021 ஒக்டோபர் 29 திகதி கிடைத்திருந்த புதிய மதிப்பீட்டையும் நடைமுறைப்படுத்தி இருக்கவில்லை. 2020 ஒக்டோபர் முதல் 2022 மே 31 திகதி வரையும் கடையறை வாடகை செலுத்துவதனை புறக்கணித்திருந்ததுடன் சபையினால் வாடகை செலுத்தாதது தொடர்பாக எவ்வித நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் 105 கடையறைகளிலிருந்து 2021 திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 13,568,720 ஆனது. | | |
| (இ) | புதிய சந்தை கடையறை வாடகை 60 அறைகளிலிருந்து 2021 திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 761,225 ஆனதுடன் அநேகமான கடையறைகளின் உடன்படிக்கை காலம் கடந்திருந்த போதும் புதிய உடன்படிக்கைகளில் ஈடுபட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடையறைகளின் உடன்படிக்கைகளை புதுப்பிக்க கடையறை குத்தகைதாரர்களுக்கு புதிய மதிப்பீட்டுடன் எழுத்து மூலம் அறிவித்து கடையறை வாடகை அறவிடல் தொடர்பாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன். | உடன்படிக்கை காலம் முடிவடைந்தவுடனே புதிய உடன்படிக்கைகளிற்கு கைச்சாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| இயற்கை பசளை உற்பத்தி செய்யும் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக கௌசிமா இயந்திரமொன்றை பெற்றுத்தருவதாக மேல் மாகாண திண்மக் கழிவு முகாமைத்துவ அதிகாரி சபையினால் எழுத்து மூலம் அறிவித்திருக்காத போது சுதுவெல்ல இயற்கை பசளை கொட்டில் அமைந்துள்ள காணியில் கௌசிமா இயந்திரமொன்று பொருத்துவதற்காக மண் பரிசோதனை செய்வதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 483,000 தொகையை 2021 ஒக்தோபர் 21 திகதி செலுத்தி இருந்த போதும் கணக்காய்வு திகதியான 2022 மார்ச் 31 திகதியன்றும் இந்த இயந்திரத்தை பெற்றுக் கொண்டு இஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - | வரையிவல் கருத்திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |